IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.159/2021

Deposition of Witness for P.W.13

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.வடிவேல். |
| FATHER NAME | - | திரு.பெரியண்ணன் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | உதவி இயக்குநர், தடய அறிவியல் ஆய்வகம். |
| AGE | - | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.10.2025.

3,5 எதிரி ஆஜர். 1,2,4,7 ஆஜர் இல்லை. 6 வது எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை–</u>

நான் தற்போது சேலம் மாநகர் காவல் ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வரும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில், உதவி இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.01.2015 அன்று வேலூர் வட்டார தடய அறிவில் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்த போது சட்டம் சார்ந்த மருத்துவர் அரசு கல்லூரி மருத்துவமனை, வேலூர் அவர்களிடமிருந்து குற்ற எண்.1/2015 வேப்பங்குப்பம், வழக்கிற்குரிய இறந்து போன சீனு (எ) சீனிவாசன் என்பவரின் உடல் உல்லுறுப்புக்கள் தலைமை காவலர் 580 திரு.ஆனந்தன் என்பவர் மூலமாக எங்கள் ஆய்வகத்தில் சரியான முத்திரையுடன் பெறப்பட்டது. பெறப்பட்ட உடல் உல்லுறுப்புகளின் விவரம். 1 முதல் 5 வழக்கு சொத்துகளாக என்னுடைய அறிக்கையில் எண்ணிடப்பட்டுள்ளது. 1.இரைப்பை, 2.சிறுகுடல் மற்றும் பெருகுடல், 3.கல்லீரல் மற்றும் சிறுநீரகம், 4.மூளை, 5.மாதிரி உப்பு தண்ணீர்

மேற்கண்ட 5 வழக்கு சொத்துகளையும் எங்கள் ஆய்வகத்தில் உதவி இயக்குநரின் மேற்பார்வையில் கவனத்துடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற் காண் வழக்கு சொத்துகளை ஆய்வு செய்ததில் மாதிரி உப்பு தண்ணீரை தவிர மற்ற 4 வழக்கு சொத்துகளையும் எத்தில் எத்தில் ஆல்கஹால் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் மேற்காணும் 4 வழக்கு சொத்துகளிலும் எவ்வித நச்சுத்தன்மை கொண்ட பொருள்களும் கண்டறியபடவில்லை. இதுவே எங்கள் ஆய்வகத்தில் நாங்கள் வழங்கிய ஆய்வகத்தின் நஞ்சியியல் ஆய்வறிக்கை ஆகும். அது அ.த.சா.ஆ.10. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை–</u>

இறந்தவரின் இரைப்பையில் 161 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது. சிறுகுடல் மற்றும் பெருகுடலில் 149 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது. கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் 195 மில்லி கிராம்எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது. மூளையில் 138 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது என்றால் சரி. மொத்தமாக 643 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹால் அவரது உடலில் இருந்தது என்றால் சரியல்ல. தனித்தனியாக தான் அதை கணக்கிட முடியும் மொத்தமாக கணக்கிட முடியாது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 28.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore